**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 69/2022**

**Date** :17.03.2026

**பி. வா.சா1- ஜோஸ் ராபி வில்சன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு வேண்டி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கை வாதி எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கை வாதி எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் கணக்கு வழக்கு சம்மந்தமாக. 1ம் பிரதிவாதியின் கீழ் தான் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து CSI church -களும் இயங்கி வருகிறது என்றால் சரிதான்.

ஆகையால் மேற்படி Church களில் உள்ள பிரச்சனைகள் அனைத்தையும் 1ம் பிரதிவாதிகளிடம் தான் முறையிடுவார்கள் என்றால் சரிதான். 19.06.2021 அன்று வாதி அவருடைய சிறக்கரை சபையில் உள்ள கணக்கு வழக்குகள் சரியில்லை என்று 1ம் பிரதிவாதியிடம் முறையீடு செய்துள்ளார் அது வாசாஆ 1 என்றால் சரிதான். மேற்படி வாசாஆ 1 ன் புகார் படி 24.11.2013 முதல் 31.05.2021 வரை சபையில் நடந்த கட்டுமான பணிகளில் முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை என்று அன்றைய பொருளாளர் டேவிட் ஜெபராஜ் என்பவர் கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நான் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு வேண்டி சாட்சியம் அளிக்க வந்துவிட்டு மேற்படி விவரம் குறித்து தெரியாது என்று கூறுவது வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி அன்றைய பொருளாளர் டேவிட் ஜெபராஜ் என்பவர் அனுப்பிய கடிதத்துடன் தனிக்கை அறிக்கை அனுப்பாத காரணத்தினால் வாதி இந்நீதிமன்றத்தில் மேற்படி தனிக்கை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி மனு எண் 5/2022

தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு எண் 5/2022 25.07.2024 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உத்தரவில் 4 வாரத்திற்குள் 1,2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதியிடம் மேற்படி தனிக்கை அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டி உத்தரவு பிறப்பித்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி உத்தரவு பிறப்பித்து சுமார் 1 ½ ஆண்டுகள் ஆயினும் தற்போது வரையிலும் மேற்படி தனிக்கை அறிக்கையை நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அறிக்கைகள் church ல் தான் உள்ளது.

மேற்படி தனிக்கை 1,2 பிரதிவாதிகள் அலுவலகத்தில் தான் நடைபெற்றது அது எங்கள் அலுவலகத்தில் தான் தற்போதும் உள்ளது என்றால் சரியல்ல. எங்கள் அலுவலகத்தில் மேற்படி தனிக்கை அறிக்கை இல்லை என்று கூறி நீதிமன்றத்தில் ஏதேனும் பிராமாணப்பத்திரம் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. மேற்படி தனிக்கை அறிக்கை இல்லை என்று கூறி நீதிமன்றத்தில் ஏதேனும் பிராமாணப்பத்திரம் தாக்கல் செய்தால் கணக்கு வழக்குகளில் உள்ள முறைகேடுகள் தெரியவரும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி தனிக்கை அறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் இருப்பது இந்நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் என்றால் சரியல்ல.

CSI சபைகளில் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை செயற்குழு தேர்தல் நடைபெறும் என்றால் சரிதான். ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கும் அடுத்த தேர்தலுக்கு முன்பாக பொதுக்குழு கூட்டம் கூட்டி கணக்கு வழக்குகளை தாக்கல் செய்வார்கள் என்றால் சரிதான். அந்தந்த church ல் தாக்கல் செய்வார்கள். ஒவ்வொரு 3 ஆண்டுகளுக்கும் அடுத்த தேர்தலுக்கு முன்பாக பொதுக்குழு கூட்டம் கூட்டி கணக்கு வழக்குகளை பேராயத்தில் தாக்கல் செய்வார்கள் என்றால் சரியல்ல.

நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2012 முதல் இன்று வரை சுமார் 5 தேர்தல்கள் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி 5 தேர்தல்களிலும் தேர்தலுக்கு முன்பாக பொதுக்குழு கூட்டம் கூட்டி கணக்கு வழக்குகளை பேராயத்தில் தாக்கல் செய்வார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு தேர்தலுக்கு முன்பாக பொதுக்குழு கூட்டம் கூட்டி கணக்கு வழக்குகளை பேராயத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் 1ம் பிரதிவாதி தேர்தலை நடத்த அனுமதிக்க மாட்டார் என்றால் சரியல்ல.

வாதி அ.வ.எண் 182/2022 வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கு தேர்தல் முறைகேடு வழக்கு என்றால் தெரியாது. மேற்படி வழக்கை நீர்த்துப் போய்விட்டதால் வாதி பின்வழித்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். சிறக்கரை சபை 22.12.2024 அன்று 1ம் பிரதிவாதியால் திறந்து வைக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கில் வாதி கேட்டுள்ள பரிகாரத்தின்படி 1 முதல் 3 பிரதிவாதிகள் கணக்கு வழக்குகளின் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு கடமையும் பொறுப்பும் உள்ளவர்கள் என்றால் சரியல்ல.

3ம் பிரதிவாதி மேற்படி சிறக்கரை சபையின் போதகர் மற்றும் செயற்குழு தலைவர் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி தலைமையில் தான் கணக்கு வழக்குகள் சமர்பிக்க படும் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி கணக்கு வழக்குகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு கடமையும் பொறுப்பும் உள்ளவர் என்றால் சரியல்ல. மேற்படி கணக்கு வழக்குகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் முறைகேடுகள் வெளிவரும் என்பதால் நான் இந்நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் ஆஜராகாமல் இருக்கின்ற 4 முதல் 9 பிரதிவாதிகளை காப்பாற்ற வேண்டி நான் இந்நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள படி நாங்கள் இவ்வழக்கில் தேவையற்ற நபர்கள் என்று கூறி தட்டிக்களிக்க முடியாது என்றால் சரியல்ல. எனக்கு இவ்வழக்கு சம்மந்தமா பல விவரங்கள் தெரியவில்லை ஆகையால் நான் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க தகுதியற்றவர் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் CSI பேராயத்தின் அதிகாரிகள் ஆகையால் CSI சிறைக்கரை சபையின் கணக்கு வழக்குகளில் ஏற்பட்ட முறைகேடுகளில் எனக்கும் பங்கு உண்டு என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**